31st January 1972]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படித் திருப்பியனுப்பப்பட்ட தகவல் வெளிவரவில்லை. சித்த வைத்திய மருத்துவமனைகள் பல கோயில் களில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று நாம் எண்ணியிருந்தோம். பல கோயில் களில் ஆரம்பிக்கப்பட்ட சித்த வைத்திய மருத்துவ மனைகள் வெற்றிகரமாக நடைபெறாத காரணத்தால், அதை ஆராய்ந்து வெற்றிகரமாக நடைபெறுகிற இடங்களில் மட்டும் சித்த வைத்திய மருத்துவமனைகளை ஆரம்பிக்கலாம் என்று தற்போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether there is any proposal to prepare a State cadre of all employees of the Hindu Religious and Charitable Endowments Board and to give them uniform scales of pay and whether the surplus of this amount would be utilised for this purpose?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட உத்தேசமில்லை.

Subramanya Temple, Tiruchendur

* 75 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that there is a threat of sea erosion on the Subramanya Temple, Tiruchendur and its Eastern wall; and

(*b*) if so, the action taken by the Government in this regard?

சுப்பிரமணியர் கோயில், திருச்செந்தூர்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்செந்தூர் சுப்பிரமணியர் கோயிலுக்கும், அதன் கிழக்குப் பக்கச் சுவருக்கும் கடல் அரிப்பு அபாயம் இருக்கிறதென்பது உண்மையா?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) கடல் தடுப்புச் சுவர் கட்டவேண்டிய அவசியமில்லை என்றும், ஆனால், கருங்கற்களையும், மணலையும் போட்டுக் கொட்டிவைப்பதன் மூலம் கிழக்குப் பிரகாரத்தை நீட்டித்தாலே போதுமானது என்றும் வல்லுநர்கள் கூறுகிறார்கள். ரூ. 3.5 லட்சத்திற்கான மதிப்பீடு தூத்துக்குடி துறைமுகத் திட்டத் தலைமைப் பொறியாளரால் தயாரிக்கப்பட்டு இந்து சமய அறக்கட்டளை துறை ஆணையாளரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. தேவஸ்தான நிதி களிலிருந்து இவ்வேலை செய்யப்பட விருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : அந்த மதிற்சுவர்களில் கிழக்கு வடக்குப் பகுதி களில் கடல் அலைகளினால் இடையூறு ஏற்படுகிறது என்று அதைத் தடுப்பதற்குத் திட்டமிட்டு மத்திய அரசினிடமிருந்து ரூ. 11 லட்சம் கேட்டோமே அப்படி மத்திய அரசிடம் ரூ. 11 லட்சம் கேட்ட பிறகு, இப்போது அதற்கு மூன்று லட்சம் போதுமென்று கருத்து எப்படி வந்தது என்று அறிய விரும்புகிறேன்.

[31st January 1972

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : 1966-ல் சுமார் ரூ. 4.40 லட்சம் செலவில் இந்தத் தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்று ஏற்கனவே மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அதற்குப்பிறகு கொஞ்சநாள் கழித்து 9-6-1968-ல் அந்தக் கோயிலுக்கு மத்திய அமைச்சர் மாண்புமிகு வி. கே. ஆர். வி. ராவ் அவர்கள் வருகை தந்தபோது, மத்திய அரசிலிருந்து தேவையான உதவியைச் செய்வதாக வாக்குறுதி தந்தார்கள். மீண்டும் எஸ்டிமேட் மாற்றம் செய்யப்பட்டு 8.10 லட்சம் ரூபாய் அதிகமாகியது. கோயில் நிர்வாகிகள் ஒரு பங்கு தர வேண்டுமென்று கேட்டார்கள். 25% அவர்கள் கொடுப்பதாகச் சொன்னோம். முழுப்பணத்தையும் மத்திய அரசு கொடுக்க மறுத்துவிட்டார்கள். மீண்டும் தூத்துக்குடி துறைமுகத் தலைமைப் பொறியாளர், நேரில் பார்த்துவிட்டு ரூ. 11.80 லட்சம் செலவில் மறுபடியும் மதிப்பீட்டைத் தயாரித்தார்கள். இந்திய அரசு கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தைக் கேட்டபோது அங்கிருந்து உதவிதருவதற்கு மறுத்துவிட்டதால், அந்தக் கோயிலை எப்படியாவது காப்பாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டதனால், மீண்டும் தூத்துக்குடித் துறைமுகத்தின் தலைமைப் பொறியாளர் அவர்களையும் அதே மாதிரி ஒரு குழு அமைத்து முதல் நிலை பொறியியல் வல்லுனர்கள், தலைமைப் பொறியாளர்கள், பம்பாய் துறைமுக நீரியல் தலைமைப் பொறியாளர், கல்கத்தா துறைமுக கப்பல் போக்குவரத்துத் துறையினர், கடல்கலை போக்குவரத்து அமைச்சகத்தின் துணை வளர்ச்சி ஆலோசகர் போன்றவர்களை அனுப்பி ஆராய்ந்தோம். பிறகுதான் கடல் தடுப்புச்சுவர் தேவையில்லை, கல்லையும் மணலையும் கொட்டி வைத்து நாம் தடுப்புச் சுவர் எழுப்பிவிட்டால் போதுமென்று முடிவு செய்யப்பட்டது. இன்றைக்கு ரூ. 3½ லட்சம் செலவில் வேலை துவங்கியிருக்கிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : திருச்செந்தூர் முக்கியமான கோயில். இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பிரசித்தி பெற்ற கோயில் முதலில் ரூ. 11 லட்சம் செலவு செய்வதாகத் திட்டமிடப்பட்டு அதற்கு 25% கோயில் கொடுப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது. கோயில் கொடுக்கிற பணத்தைக் கொண்டே தடுப்புச் சுவர் கட்டுவதற்குப் பயன்படுத்த இப்போது முடிவாகியிருக்கிறதா ? பகுதிப் பணம் மாநில அரசு கொடுத்து நல்லமுறையில் அதைக் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, நான் இந்த நிபுணர்களுடைய விவரத்தையெல்லாம் கஷ்டப்பட்டுப் படித்ததற்குக் காரணமே உறுப்பினர் அவர்கள் மீண்டும் கேள்வி கேட்காமல் இருக்க வேண்டுமென்றுதான். ஆனால் அவர் கேட்டுவிட்டார். பொறியாளர்கள் மட்டுமே பார்த்து ரூ. 11.80 லட்சம் மதிப்பீடு செய்தார்கள். பம்பாய், கல்கத்தா துறைமுகத்தைச் சேர்ந்த அகதிகள், நீரியல் ஆராய்ச்சியாளர்கள் முதலியோர் ஆராய்ந்து ரூ. 3½ லட்சம் போதுமென்று சொன்னதற்குப் பிறகுதான் இந்தக் காரியத்தைச் செய்கிறார்கள்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில் உடையும் தருவாயில் இருக்கிறது. திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு அவர்களைக் கொண்ட ஒரு கமிட்டி கூட ஏற்படுத்தப்பட்டிருக்கிறது அதற்காக. அந்தக் குழு என்ன வேலை செய்கிறது என்பதையும் அந்தக் கோயில் இடியா வண்ணம் பார்த்துக்கொள்வதற்கு அந்தக் குழு தவறிவிட்டால், அரசாங்கம் அதைப் பார்த்துக்கொள்ளுமா ?

31st January 1972]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் தகவலைச் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கோயில் இடியாமல் பார்த்துக்கொள்கிற பொறுப்பு அறநிலையத் துறையைச் சார்ந்தது. அது பார்த்துக்கொள்ளும். குழு இடிகிற பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில் இடியும் தருவாயில் இருக்கிறது என்பது சரியல்ல. கோபுரம் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே விரிவு கண்டிருக்கிறது. 4 லட்சம் ரூபாய் செலவில் கோபுரத்தைப் புதுப்பிக்கும் பொறுப்பை அரசு ஏற்றுக்கொண்டு, ஒரு லட்சம் ரூபாய் திருப்பணிக் குழு வசூலித்துத்தர வேண்டுமென்று சொல்லியதை ஏற்றுக்கொண்டு, இப்போது வேலை தொடங்கியிருக்கிறார்கள். அவர்கள் தெரிவித்ததைப் போல, அந்த வேலை ரூ. 4 லட்சத்தோடு நிற்காது. இன்னும் பல லட்சம் ரூபாய் தேவைப்படும். மறுபடியும் 'ரிவைஸ்டு எஸ்டிமேட்' தயாரிக்க வேண்டியிருக்கும் என்று கருதுகிறேன்.

மிஸ்டர் சேர்மன்: இது பிரசங்க நேரமல்ல. சப்ளிமெண்டரி இருந்தால் கேட்க வேண்டும், பிரசங்கம் செய்தால் நான் அதை அனுமதிக்க முடியாது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: பி.டப்ள்யூ டிபார்ட்மெண்டில் பம்பாய் கம்பெனிகளிலிருந்து தகவல் சேகரித்ததாகச் சொன்னார்கள். அது முடிய இனி எவ்வளவு காலமாகும்? அதில் தீவிர முயற்சி எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இங்கே கேட்கப்பட்ட கேள்வி திருச்செந்தூரைப் பற்றியது. திருச்செந்தூருக்கும் ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் தூரமாக இருப்பதால் அதுபற்றிய தகவல் இல்லை.

UNSTARRED QUESTIONS.

Photographers sponsored by the Slum Clearance Board

1. *Q.*—THIRU V. ISVARIMURTI: Will the Hon. the **Chief Minister be pleased to state—**

(*a*) the names of the photographers sponsored by the **Slum** Clearance Board to take photos of the slum-dwellers in Madras **City; and**

(*b*) the amount paid for each photographer?

***A.*—**

(*a*) **Names of the photographers sponsored by the Slum** Clearance Board to take photos of the slum, dwellers in Madras **City;**

1. Thiru Jayachandran.
2. Thiru R. Parthasarathy.
3. Thiru R. S. Vasan.
4. Thiru D. Venkatesan.
5. Thiru C. Seshah.
6. Thiru K. R. Purushothaman.
7. Thiru S. B. Radhakrishnan.